வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 0126 / ஆ4 / 2022 நாள் 10–02–2022

பொருள் தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு முதல் திருப்புல் தேர்வு பிப்ரவரி 2022 – பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு கூடுதல் அறிவுரைகள் வழங்குதல் சார்பு.

பார்வை 1. சென்னை பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறை கடித ந.க.எண் 020931/பிடி2/இ1/2021 நாள் 12.11.2021
2. சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 026826/எச்1/2021 நாள் 31.01.2021

••••••

பார்வையில் காணும் இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதத்திற்கிணங்க வேலூர் மாவட்டத்தில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு முதல் திருப்புதல் தேர்வு 09.02.2022 அன்று முதல் நடைபெறுகிறது. முதல் நாள் நடைபெற்ற தமிழ் பாட விடைத்தாட்கள் பெறும் மையத்தில் சில குறைபாடுகள் கண்டறியப்பட்டது. அக்குறைபாடுகள் இல்லாமல் விடைத்தாட்களை ஒப்படைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு கீழ்க்காணும் கூடுதல் அறிவுரைகள் வழங்கப்படுகிறது. அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து உயர், மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. தேர்வுக் கால அட்டவணையின்படிதான் தேர்வுகள் நடத்தப்படவேண்டும். ஒதுக்கீடு செய்யப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் தான் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்.
2. தேர்வுகள் நடைபெறும் நாட்களுக்குண்டான **வினாத்தாட்களை** அன்று காலையில் வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. தேர்வுகள் நடைபெறும் பள்ளிகளுக்கு சிறப்பு பறக்கும்படை பணியாளர்கள் பார்வையிட நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்வுகள் நேர்மையாகவும், சிறப்பாகவும், எவ்வித புகாருக்கும் இடமளிக்காவண்ணம் நடத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
4. தேர்வுகள் முடிந்தவுடன் அன்றே வேலூர் , ஸ்ரீ வெங்கடேஸ்ரா மேல்நிலைப் பள்ளியில் விடைத்தாள் பெறும் குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். 50 விடைத்தாட்களுக்கு ஒரு உறை கட்டாயம் பயன்படுத்தவேண்டும்.
5. 09.02.2022 அன்று நடைபெற்ற தேர்வு விடைத்தாட்களை ஒரு பள்ளி 139 மாணவர்களுக்குண்டான விடைத்தாட்களை உறை பயன்படுத்தப்படாமல் ஒரே பண்டலாக கட்டி ஒப்படைத்துள்ளனர். அதுபோல் ஒப்படைக்காமல் 50 விடைத்தாட்களுக்கு ஒரு உறை என பயன்படுத்தப்பட வேண்டும்.
6. உறையின் மீது பள்ளி சார்பான விவரங்கள் பதியப்பட கூடாது.

7. அனைத்து உறைகளை ஒரே பண்டலாக செய்தித்தாளில் கட்டி அதன் மீது மட்டுமே பள்ளி சார்பான விவரங்கள் பதியப்பட வேண்டும். வேறு எங்கும் பள்ளி சார்பான விவரங்கள், பள்ளி முத்திரைகள் பயன்படுத்த கூடாது. அதற்கு என வழங்கப்பட்டுள்ள படிவத்தினை பயன்படுத்தினலே போதுமானது ஆகும்.
8. விடைத்தாள் ஒப்படைக்கும் விவரங்கள் அடங்கிய படிவம் பூர்த்தி செய்து இரண்டு நகல்கள் வழங்கப்பட வேண்டும்.
9. ஒவ்வொரு உறையில் 50 விடைத்தாட்கள் வைத்தவுடன் பூர்த்தி செய்யப்படாத இரண்டு மதிப்பெண் பட்டியலினையும் கட்டாயம் அந்த உறையினுல் வைக்கப்பட வேண்டும்.
10. நாளை முதல் விடைத்தாட்கள் ஒப்படைக்கும் நபர் விடைத்தாட்களை ஒப்படைத்தபின் தங்கள் பள்ளியில் மதிப்பீட்டு பணிக்கான முந்தன நாள் நடைபெற்ற பாடத்திற்கான விடைத்தாட்கள் கட்டாயம் பெற்றுச் செல்ல வேண்டும்.
11. மதிப்பீடு செய்வதற்கான விடைக்குறிப்புகள் சார்பான விவரம் பின்னர் தெரிவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.
12. தங்கள் பள்ளியிலிருந்து தாங்கள் அனுப்பும் ஆசிரியர் அல்லது பணியாளர் விடைத்தாட்களை ஒப்படைத்தனரா மற்றும் விடைக்குறிப்புகள் பெற்றுகொண்டனரா என்பதை அலைபேசி மூலம் உறுதி செய்துக்கொள்ள வேண்டும்

மேற்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மீண்டும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய முக்கிய செய்தி இத்தேர்வு தொடர்பாக எவ்வித புகாருக்கு இடமளிக்காவண்ணம் செயல்படுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஒப்பம்) க. முனுசாமி,
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.